இதயம் முழுதும் தலைவன் அவன் பெயரை சொல்லி எழுவோம் 2
பகைவன் நெஞ்சில் நுழைவோம் இன்று பலாலிக்குள்ளே புகுவோம் 2
இன்று பலாலிக்குள்ளே புகுவோம் 2

றங்கனுடன் சிரித்து நவரத்தினமும் போனான்
திருவினோடு வெடி சுமந்து இலகன் ஜெயம் போனான்

நிலவு வானில் உறங்கும் நேரம் கரிய புலிகள் விரைந்தன 2
பகை ஆடிப்பாடும் நேரம் மழை சாரல் தூவும் காலம் 2
பறந்து திரிந்த இரும்புப் பறவை எரிந்து போனதே
பகைவன் ஏறும் கவச ஊர்தி நகர்ந்து போனதே

நிலவு வானில் உறங்கும் நேரம் கரிய புலிகள் விரைந்தன 2
பகை ஆடிப்பாடும் நேரம் மழை சாரல் தூவும் காலம்

விழியில் நெருப்பை சுமந்த புலிகள் வெடிகள் சுமந்து நகர்ந்தனர்
விடியும் பொழுதை விரைவிற்காணும் விருப்பத்தோடு கரைந்தனர்
கரியபுலிகள் எரிந்த திசையில் குருதி வழிந்து சிவந்தது
உலகம் முழுதும் இவரின் பெயரில் கவிதை மேகம் பொழிந்தது
கவிதை மேகம் பொழிந்தது

நிலவு வானில் உறங்கும் நேரம் கரிய புலிகள் விரைந்தன 2
பகை ஆடிப்பாடும் நேரம் மழை சாரல் தூவும் காலம்

இதயம் முழுதும் புலிகள் தாகம் தமிழர் தேசம் என்றனர்
எமது மண்ணில் எதிரி வாழும் இடத்தை எரிக்க சென்றனர்
பகைவன் இருக்கும் பலாலிக்குள்ளே கரிய புலிகள் வெடித்தன
பறந்து போன உறவின் உருகி நிலவில் காற்றும் துடித்தனர்
நிலவில் காற்றும் துடித்தனர்

நிலவு வானில் உறங்கும் நேரம் கரிய புலிகள் விரைந்தன 2
பகை ஆடிப்பாடும் நேரம் மழை சாரல் தூவும் காலம் 2
பறந்து திரிந்த இரும்புப் பறவை எரிந்து போனதே
பகைவன் ஏறும் கவச ஊர்தி நகர்ந்து போனதே